**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.421** **நாள்:07.12.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்களில் செயல்பாட்டில் உள்ள நவீன மாடுகள் காப்பகம் மற்றும் புதிதாக கட்டப்பட்டு வரும் நவீன மாடுகள் காப்பகங்களில் உள்ள மாடுகளுக்கு தீவனம் வழங்கி பராமரிப்பதற்கு விருப்பமுள்ள தன்னார்வலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களுக்கு விருப்ப கடிதம் அளிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கடந்த 2024 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி சுமார் 22,875 மாடுகள் அவற்றின் உரிமையாளர்களால் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பான்மையான மாடுகள் உரிய இடவசதி இன்றி, தொழுவங்களுக்குள் வைத்து பராமரிக்கப்படாமல் சாலைகள் மற்றும் பொது இடங்களில் சுற்றித்திரிந்து வருகின்றன. இதனால் போக்குவரத்துக்கு இடையூறு, பொது சுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன் சில நேரங்களில் பொது மக்கள் மாடுகளால் தாக்கப்படும் சம்பவங்களும் ஏற்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெருக்களில் போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களுக்கும் தலா ஒரு மாடு பிடிக்கும் வாகனம் ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலா 5 மாடு பிடிக்கும் ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பிடிக்கப்படும் மாடுகள் புதுப்பேட்டையில் உள்ள மாநகராட்சி மாட்டுத் தொழுவத்தில் அடைக்கப்பட்டு அபராதத்தொகையாக மாடு ஒன்றிற்கு ரூ.10,000/- வீதம் மாட்டின் உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு மீண்டும் சாலைகளில் விடக்கூடாது என்ற நிபந்தனையுடன் அந்த மாடுகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2021 முதல் 2025 வரையிலான நான்கு ஆண்டுகளில் மொத்தம் 16,692 சுற்றித்திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடமிருந்து ரூ. 4,43,31,600/- அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாட்டின் உரிமையாளர்கள், மாடு வளர்ப்போர் சங்கங்களின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் தங்கள் மாடுகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் இடங்களை ஒதுக்கி தருமாறு தொடர்ந்து கோரி வந்தனர்.

இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையிலும், சுற்றித்திரியும் மாடுகளை முறையாக பராமரித்திடவும், பாதசாரிகள் மற்றும் வாகனத்தில் செல்வோருக்கு அச்சுறுத்தல் மற்றும் இடையூறு ஏற்படுவதை தவிர்க்கவும், பொது இடங்களில் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதை தவிர்த்து ஒழுங்குபடுத்தவும், கால்நடை வளர்ப்போர்களது வாழ்வாதாரதம் பாதிப்புக்குள்ளாகாமல் இருப்பதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் சேவை மனப்பான்மையுடன் இத்திட்டத்தை செயல்படுத்த, 30.01.2025 அன்று நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மான எண் 104/2025ன் படியும் ஒப்புதல் பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து 1 முதல் 15 வரை உள்ள மண்டலங்களில் கீழ்க்காணும் 17 இடங்களில் நவீன மாடுகள் காப்பகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் திருவொற்றியூர், மாதவரம், இராயபுரம், தேனாம்பேட்டை ஆகிய மண்டலங்களில் நவீன மாடுகள் காப்பகங்கள் கட்டுமான பணிகள் நிறைவுற்று சுமார் 700 மாடுகள் அவற்றின் உரிமையாளர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**செயல்பாட்டில் உள்ள நவீன மாடுகள் காப்பகங்களின் விவரங்கள் பின்வருமாறு:**

| வ.எண் | மண்டலம் | பராமரிக்கப்பட்டு வரும் மாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | டி.பி.பி சாலை, திருவொற்றியூர்<br>கோட்டம்- 7, மண்டலம்-1 | 50 |
| 2. | சி. எம். டி. ஏ டிரக் டெர்மினல், மாதவரம்<br>கோட்டம் - 25, மண்டலம்-3 | 60 |
| 3. | பேசின் பிரிட்ஜ் சாலை, இராயபுரம், கோட்டம் - 53, மண்டலம்-5 | 550 |
| 4. | பீட்டர்ஸ் சாலை,இராயப்பேட்டை, கோட்டம் - 115, மண்டலம்-9 | 50 |

கட்டப்பட்டு வரும் மாடுகள் காப்பகங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ.எண் | மண்டலம் | பராமரிக்கப்படவுள்ள மாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரியலூர், தீயம்பாக்கம், மணலி, கோட்டம் - 17, மண்டலம்-2 | 60 |
| 2. | காமராஜர் சாலை, கோட்டம் - 20, மண்டலம்-2 | 100 |
| 3. | மூர் மார்க்கெட், இராயபுரம், கோட்டம் - 58, மண்டலம்-5 | 60 |
| 4. | ஷெனாய் நகர், முதல் மெயின் தெரு, அண்ணா நகர், கோட்டம் - 102, மண்டலம்-8 | 180 |
| 5. | காந்தி நகர், (வடபழனி முருகன் கோயில் அருகில்) வார்டு - 129, மண்டலம்-10 | 50 |
| 6. | யூனியன் சாலை, நொளம்பூர், கோட்டம் - 158, மண்டலம்-12 | 100 |
| 7. | நந்தம்பாக்கம் , கோட்டம் - 158, மண்டலம்-12 | 50 |
| 8. | வீரபாண்டிய கட்டபொம்மன் குறுக்கு தெரு, பெருங்குடி கோட்டம் - 184, மண்டலம்-14 | 120 |
| 9. | தாம்பரம்-வேளச்சேரி மெயின் ரோடு, கோட்டம் - 188, மண்டலம்-14 | 110 |
| 10. | இஸ்கான் கோயில் அருகில், கோட்டம் - 194, மண்டலம்-15 | 105 |
| 11. | என் ஆர் எஸ் சாலை, அம்பத்தூர், கோட்டம் - 83, மண்டலம்-7 | 100 |
| 12. | வீரபாண்டிய கட்டபொம்மன் குறுக்கு தெரு, பெருங்குடி, கோட்டம் - 184, மண்டலம்-14 | 120 |
| 13. | இஸ்கான் கோயில் அருகில், கோட்டம் - 194, மண்டலம்-15 | 110 |

இத்திட்டத்தை மேலும் சிறப்புடன் செயல்படுத்த மண்டலம்-5. கோட்டம் -53ல் செயல்பட்டு வரும் நவீன மாடுகள் காப்பகத்தி உள்ள மாடுகளுக்கு தீவனம் வழங்கி பராமரிப்பதற்கு சேவை மனப்பான்மை உள்ள தன்னார்வலர் குழுவிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவுள்ளது. மற்ற மண்டலங்களில் கட்டப்பட்டு வரும் நவீன மாடுகள் காப்பகங்களுக்கும் இந்நடைமுறை செயல்படுத்தப்படவுள்ளதால் இக்காப்பகங்களை தீவனம் வழங்கி பராமரிப்பதற்கு தயாராக உள்ள தன்னார்வலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் (NGO's) பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களுக்கு இது குறித்து விருப்பக்கடிதம் அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் மாடுகளால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**